பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 03 ஞாயிற்றுக்கிழமை (16-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 169

# பிரபாகரனுடன் பேசுவதற்கு எவரேனும் உதவி புரியலாம்

## தான் எப்போதும் தயார் என்கிறார் ஜனாதிபதி டி.பி.

கொழும்பு, மே 16

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் திரு வே. பிரபாகரனுடன் நான் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எவரும் உதவி புரியலாம்.

பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நான் எப்போதும் தயாராகவே உள்ளேன். அதற்கு உதவுவதற்கு எவர் முன் வந்தாலும் அது மகத்தான செயலாகக் கருதப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வைத்தே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்,

திரு. விஜேதுங்கா தாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் இம் மாதம் 7 ஆம் திகதி மக்களுக்கு விடுத்த செய்தியில் —

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிர

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகள் அரசை அச்சுறுத்தினால்

## மாகாணசபை அபிவிருத்திக்கு நிதி ஏதும் ஒதுக்க மாட்டேன்

### மிரட்டுகிறார் விஜேதுங்க

கொழும்பு, மே 16

"இனிவரும் காலத்தில் எதிர்க்கட்சிகள் அரசைத் தூஷிக்கவும், அமைதியைக் குலைக்கவும் முற்படுமாயின் அவை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணசபைகளுக்கான அபிவிருத்திக்குரிய நிதியை ஒதுக்க மாட்டேன். நான்தான் நிதி அமைச்சர் என்பதையும் எதிர்க்கட்சிகள் மறக்கக் கூடாது"

மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க இவ்வாறு கூறியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் முடிவுகளினால் அரசாங்கத்தை மாற்ற முடியாது என்றும் ஜனாதிபதி கூறினார்.

மக்களின் அபிப்பிராயத்தை இத்தேர்தல் மூலம் மதிப்பிட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் பேச்சு குறித்து எதிர்க்கட்சிகள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன. (ஓ-6)

## ஜனாதிபதியின் கூற்று மோசமானது அரசமைப்புக்கு விரோதமானது

### சிறிமாவோ கண்டனம்

கொழும்பு, மே 16

மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்குவது குறித்து ஜனாதிபதி விஜேதுங்க பேசிய பேச்சு எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது.

ஜனாதிபதியின் கூற்று அபாயகரமானது; அரசியல் சட்டத்துக்கு விரோதமானது; மோசமானது. அது ஜனாதிபதிக்கு ஒவ்வாத பேச்சாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்க இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளதாக ஏஜென்சிச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தடை செய்யப்பட்ட "ஏசியா வீக்" தரும் தகவல்கள்

## தமக்கு எதிரானவர்களை கொல்வதில் ஆளும் கட்சியினர் கை தேர்ந்தவர்கள்

### பிரேமதாசாவும் எதுவும் தெரியாதவர் போல் பாசாங்கு செய்தார்

கொழும்பு, மே 16

ஜே. வி. பி. கிளர்ச்சியின் போது 1989 ஜூலை மாதம் முதலாம் வாரத்தில் மட்டும் தென்னிலங்கையில் சுமார் ஐயாயிரம் சிங்கள இளைஞர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டுத் தீயிடப்பட்டனர்.

ஆளுங்கட்சியினர் தமக்கு எதிரான எவரையும் கொலை செய்வதற்கு பழகிக்கொண்டனர். பிரேமதாச தமக்கு இது பற்றி எதுவுமே தெரியாதது போன்று பாசாங்கு செய்து கொண்டார்.

ஸ்ரீலங்கா அரசினால் தடை செய்யப்பட்ட 'ஏசியா வீக்' சஞ்சிகையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரேமதாச குறித்து 'ஏசியா வீக்'கில் வெளியான மற்றும் சில தகவல்கள் வருமாறு:-

★ 1990 பெப்ரவரி 18 ஆம் திகதி மாலை சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ரொனி குணசிங்காவும் அப்போதைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பிரேமா கொலை சி.ஐ.டி. விசாரணை

கொழும்பு, மே 16

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலை பற்றிய விசாரணை, இரகசியப் பொலீஸ் திணைக்களத்திடம் (சி ஐ டி) ஒப்படைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கொலை பற்றி நேற்று முன்தினம் வரை குற்றப் புலனாய்வுப் பணியகம் (சி.டி.பி.) விசாரணைகளை நடத்தி வந்தது.

மேலிட உத்தரவைத் தொடர்ந்து, குற்றப்புலனாய்வுப் பணியகத்தினர் தாம் நடத்திய விசாரணைகளின் அறிக்கையை இரகசியப் பொலீஸ் திணைக்கள பணிப்பாளர் திரு. புஞ்சிபண்டாராவிடம் கையளித்தனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

## 1995 மார்ச்சில் தான் பொதுத்தேர்தல் நடக்கும்

கொழும்பு, மே 16

குறித்த காலக்கெடுவுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படமாட்டாது. 1995 மார்ச் மாதத்தில் தான் நடக்கும்.

இவ்வாறு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாவனெல்ல என்ற இடத்தில் நடந்த ஐ.தே.க வின் இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்தார்:

மாகாணசபைத் தேர்தல்களில் மக்கள் எதிர்க்கட்சி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலைப் பகுதியில் ஷெல், பீரங்கித் தாக்குதல்

### வயோதிப மாது காயம்

பொன்னாலைப் பகுதியில் நேற்றுப் படையினர் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

பொன்னாலை, சுழிபுரம், மூளாய்ப் பகுதிகளில் குண்டுகள் விழுந்து வெடித்தன.

கடற்படைப் படகுகளில் இருந்தும் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது

மூளாய் மேற்கில் விழுந்து வெடித்த ஒரு ஷெல்லினால் 80 வயது மூதாட்டி ஒருவர் காயம் அடைந்தார்.

சுழிபுரம் காளுவளைச் சேர்ந்த தெசஊழியன் நாகம்மா என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு...வார். [இ-17-15-5]

## எதிரணியினர் கூட்டங்களில் மிக அதிகமான மக்கள்!

கொழும்பு, மே 16

கடந்த சில தினங்களாக இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் — எதிர்க்கட்சிகளின் ஏற்பாட்டில் நடந்த கூட்டங்களில்தான் — அதிக எண்ணிக்கையான மக்கள் காணப்பட்டனர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

தேர்தல் பிரசார இறுதி நாளான கடந்த வெள்ளிக்கிழமை மாவனெல்ல என்ற இடத்தில் ஐ. தே. கவின் கடைசிக் கூட்டம் நடைபெற்றது. ஜனாதிபதியும் அக்கூட்டத்தில் உரையாற்றினார் அந்தக் கூட்டத்துக்கும் சுமார் ஐந்நூறு பேர் வரையிலேயே வந்திருந்தனர் என்றும்—

ஆனால் எதிர்க்கட்சிகளின் கூட்டத்துக்கு இதைவிட மூன்று மடங்கு அதிகமானோர் கூடியிருந்தனர் என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கூடிய இடங்களைக் கைப்பற்றலாம் என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## திருநாவுக்கரசு இலட்சுமிப்பிள்ளை

நாரந்தனை வடக்கைச் சேர்ந்தவரும் தற்போது 145, பலாலி றோட், வளாகச் சந்தி, திருநெல்வேலி எனும் முகவரியில் வசித்தவருமாகிய திருமதி திருநாவுக்கரசு இலட்சுமிப்பிள்ளை நேற்று (15-5-93) சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (மிருக வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியாரும், பாரிசாதம், நவநீதம், இந்திரா ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற திரு. த. செல்வரெட்டினம் (துறைமுக அதிகார சபை), திரு. க. சண்முகம் (யூனிவேர்சல் றேட் சென்ரர், கொழும்பு), திரு. த. சத்திய தாசன் (அதிபர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி ஸ்ரீக்குமார் பிறேமா, ஹேமா, ஜெயராஜ் (ஜேர்மனி), விமலா, நிஜி, திரு. திருமதி உதயகுமார் பொறியியலாளர், (U. K), திருமதி புவனேந்திரன் சோபனா, தேவகுமார் (பொறியியலாளர்), சுரேஸ் குமார், பிரகலா, செந்தில்குமார், செந்தூரன், காயத்திரி, பிரியதர்சினி ஆகியோரின் பேர்த்தியும், சிரோமினாவின் பூட்டியும், தவபாலனின் (செந்தூரன்ஸ்) பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16-5-93) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு 145, வளாகச் சந்தி, திருநெல்வேலியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
த. சத்தியதாசன்
(அதிபர்)

145, பலாலி றோட்,
வளாகச் சந்தி,
திருநெல்வேலி (25695)

---

## முருகப்பர் அம்பலவாணபிள்ளை
## பொன்னையா

மேலைப் புலோலியூர் "பொன் வயல்" முன்னைனாள் பூநகரி மணியகாரன், முருகப்பர் அம்பலவாண பிள்ளை பொன்னையா அவர்கள் 15 05-93 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்வன் பொ. திருநாவுக்கரசு, திரு. பொ. மாணிக்கவாசகர் (இளைப்பாறிய உதவி விவசாய அதிபர் - பயிர் பாதுகாப்பு) அவர்களினதும் தந்தையும், திருமதி மா. சாவித்திரி தேவியின் மாமனும், மா. அனந்தசயனன் (New Zeland), மா சதானந்தன் (U K) ஆகியோரின் பாட்டனும், செல்வன் அ. சங்கரின் (New Zeland) பூட்டனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று (16-05-93) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு பருத்தித்துறை கடற்கரை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
பொ. மாணிக்கவாசகர்
(மகன்)

"பொன் வயல்"
புலோலி மேற்கு,
புலோலி. (25689)

---

## அப்பையா இராசநாயகம்

இணுவில் தெற்கைச் சேர்ந்த அப்பையா இராசநாயகம் அவர்கள் 14-05 93 அன்று காலை இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற சீனியர் அப்பையா - சொர்ணம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற சற்குணம் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வநாயகத்தின் (கணேசன் அரிசி ஆலை) அன்புச் சகோதரரும், மயூரநாதன் (கணேசன் ரெக்ஸ்டைல்ஸ் மில்), ஜெயலட்சுமி பற்குணன், சற்குருநாதன் (ஐங்கரன் அரிசி ஆலை), சிவகுருநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பற்குணன் (பொறியியலாளர் PMD கொழும்பு), தயாவதி, பாமதி, செந்தில்மதி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரபாலினி (உடுவில் மகளிர் கல்லூரி), தினேஸ் குமார் (கொக்குவில் இந்துக் கல்லூரி), சஜந்த், மாதுளன் (கொழும்பு இண்டெர் நேஷனல் கல்லூரி), சிந்தூரன் ஆகியோரின் பேரனும், அன்னலட்சுமி, செல்வநாயகம், செல்வநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர்), மகாதேவன், நடராசா, சிவனேசம், காலஞ்சென்ற பரமேஸ்வரி, கமலாதேவி, அன்னபூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பஞ்சலிங்க (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற இராசையா (A. V R), தம்பிராசா ஆகியோரின் சகலனும், பாலகுமாரன் (யாழ் இந்துக் கல்லூரி), உமாகாந்தன் (யாழ். இந்துக் கல்லூரி), சாந்தினி முத்துலிங்கம், ஸ்ரீதரன் (புறாணை), வசந்தி பாலசுப்பிரமணியம், சுமதி சின்னராசா, சுமங்கலா, குகவரதன் (U K), சத்தியா, உதயகுமாரன், டனிதா, பத்மா, சத்திரகுமார் ஆகியோரின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற சின்னையா, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தையல்முத்து (குரும்பசிட்டி), காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் நல்லம்மா (தாவடி), காலஞ்சென்ற காசிநாதன் மற்றும் அன்னலட்சுமி (இணுவில்), காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இரத்தினம் (இணுவில்) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்

ஈமக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. சற்குருநாதன்
(மகன்)

இணுவில் தெற்கு.
(25690)

---

## நாளை

மருதனார்மடம் கோட்டத்தைச் சேர்ந்த இசை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை திங்கள் காலை 8-30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (த-154)

o o o

யாழ்ப்பாணம், மே 16

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

முன்னோடிப் பரீட்சை தொடர்பாகவும், தமிழ்த்தினப் போட்டி, மெய்வல்லுநர்ப்போட்டி ஆகியன குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருப்பதாக கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். [இ]

## மாட்டு வண்டி சவாரி

சுன்னாகம் கந்தரோடை மைதானத்தில் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெறவுள்ளது. 3 பிரிவுகளாக போட்டி இடம் பெறும்

சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய ஆதரவில் இயங்கும் மாவீரன் தீசன் ஞாபகார்த்த பாலர் பாடசாலை வளர்ச்சிக்காக இந்தப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஒ)

## ஆலயங்களில்

ஏழாலை மேற்குக் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் 18 ஆம் திகதி செவ்வாய் மாலை 5 மணிக்கு "பிரதோஷ" பூசை நடைபெறும். (க-45)

o o o

கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்பாள் கோவிலில் நாளை முதல் 9 தினங்கள் அலங்கார உற்சவமும், 10ஆம் நாளாகிய மே 26 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு நவோத்தஸஹஸ்ர மஹா சங்காபிஷேகமும், விசேட தீபாராதனையும் நடைபெறும். (க)

o o o

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த வைகாசிப் பெருவிழா இன்று (ஞாயிறு) காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை செல்வச் சந்நிதி ஆலய முன்றிலில் நடைபெறும். (த-162)

o o o

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 18 ஆம் திகதி செவ்வாய் பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (க-100)

---


**A/L 95**

**இந்து நாகரீகம்**

தமிழ்

ஆரம்பம்: 18 05-93
செவ்.

திரு சோதிதாஸன்

**SHAMROCK**

யாழ். சுண்டுக்குளி.
(25692)



**A/L 95** ஆரம்பம்

**BOTANY**

MR. சிவவீரசிங்கம்

**ZOOLOGY**

MR. ஞானேந்திரன்

**SHAMROCK**

யாழ். சுண்டுக்குளி
(25691)


---

## தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு

யாழ்ப்பாணம், மே 16

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் இறுதி நாள் இம்மாதம் 25 ஆம் திகதி ஆகும். சகல பாடசாலைகளுக்கும் இது பற்றிய அறிவுறுத்தல்கள் அனுப்பப் படவுள்ளன.

தனிப்பட்ட தேர்வாளர்கள் விண்ணப்பிக்க முடியாது என்றும் பாடசாலை மாணவர்கள் தான் விண்ணப்பிக்கலாம் என்றும், எனவே பாடசாலை மாணவர்கள் அதிபர்களுடன் தொடர்பு கொண்டு குறித்த திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பும்படியும் வேண்டப்படுகின்றனர். [இ]

---

# மரண அறிவித்தல்கள்

## மனுவேல்பிள்ளை கிறிசோஸ்ரம்
## பொன்ராசா

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட ம. கி. பொன்ராசா நேற்றுக் காலமானார்,

அன்னார் வியாங்கொடை சிப்சயிட் முன்னாள் பங்காளரும், எலிசபெத்தின் அன்புக் கணவரும், யூலியற் ஜெயசீலி, கிளிநெற், யோசவ் அன்ரன் (நியூ சிறறி ரேடர்ஸ், யாழ்ப்பாணம்), பிலிப் ஜெயராஜ் (கல்யாணி ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்), அரிஸ்ரன் தேவராஜ் (ஜேர்மனி), இம்மனுவல் அருள்ராஜ் (ஜேர்மனி), ஆன் திருநெற் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், சிறில் பெனடிக்ற் (மேடன் புடவை நிலையம், யாழ்ப்பாணம்), கிளறன்ஸ் ராஜேந்திரன் (கட்டடப் படவரைஞர், கொழும்பு), ஆன் கிரேஸ் தரளம், மேரி அசம்ரா, விஜித்திரா (ஜேர்மனி), எல்சி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிங்கராயர், செல்லமணி ஜேர்மனி), பூமலர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயகுமார் (ஆஸ்திரேலியா), ஜெயந்தினி (லண்டன்), ஜெயந்திரன் (லண்டன்), ஜெயறூபினி (சுண்டிக்குளி மகளிர் வித்தியாலயம்), லுசிலா ஜெயவதனி (சுண்டிக்குளி மகளிர் வித்தியாலயம்), மரியோ கிறிசாந்தன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), மரினோ றொசாந்தன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ஜிவித்தா, ஜொவித்தா (திருக்குடும்பக் கன்னியர் மடம்), யுலிற்றா, ஜஸ்ரின் சாந்தன், சப்பீனா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் நாளை (திங்கட்கிழமை) காலை 9 மணியளவில் 27, சுவாட்ஸ்லேன், சுண்டிக்குளி இல்லத்திலிருந்து புனித யுவானியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிறில் பெனடிக்ற்
(மருமகன்)

27, சுவாட்ஸ் லேன்,
சுண்டிக்குளி. [25697]

---

## திருமதி பொன்னம்மா சபாரட்ணம்
[புளியங்கூடல்]

புளியங்கூடலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சபாரட்ணம் அவர்களின் அன்பு மனைவி பொன்னம்மா நேற்று 15 05-93 காலமாகி விட்டார்.

இவர் சிவநாதன் (ஜேர்மனி), திருமதி தவமணி திருச்செல்வம், திருமதி சோதி தியாகராஜா ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற காலிவர்த்தகர் வா. திருச்செல்வம், அ. தியாகராஜா (சுவிஸ்), திருமதி பத்துமாவதி சிவநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அன்னம்மா தர்மலிங்கம், முத்தம்மா பொன்னுச்சாமி, மனோன்மணி பாலசிங்கம், தங்கம்மா சீவரத்தினர், காலஞ்சென்ற ம. பொன்னுத்துரை ம. கனகரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரியும், அன்னலட்சுமி பொன்னுத்துரை, அன்னலட்சுமி கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், சண்முகமணி (காலி), முரளிதரன் (கனடா), சுரேஷ் (காலி), ரேணுகா சதீஸ்குமார், சத்தியன், ரேகா, ரதி, ராகினி, ரஜனி, குருபரன், பிரமிலா, கிருஷ்ணவதனி, உசாத்தினி, நிரோசிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 211 பிறவுண் வீதியில் உள்ள அவரின் சகோதரர் இல்லத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:
ம. கனகரத்தினம்
(சகோதரர்)

"மலர் வாசா"
211 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (25696)

---

## திரேசம்மா

ஊர்காவற்றுறை, நாரந்தனை தெற்கில், நிரந்தர வசிப்பிடம் கொண்ட திரேசம்மா 15 5. 93 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற வைத்தியான் மரிசிலினின் அன்பு மனைவியும் கமலா, லீலா ஆகியோரின் அன்புத் தாயுமாவார் அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (16 05 93) ஞாயிறு காலை 0 மணியளவில் மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டை ஆறுகால் மடத்துக்கு அருகாமையில் உள்ள பிலுப்பையா அவர்களின் இல்லத்தில் இருந்து ஆனைக் கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தகவல்:
திருமதி அ. கமலா
செல்வி ம. லீலா

(25694)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானிய உற்பத்தி ஊக்குவிப்பு
# வலி. மேற்கில் பெரும் வெற்றி

அராலி, மே 16

யாழ். செயலகம் நடைமுறைப்படுத்திவரும் தானிய உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம் வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பெரும் வெற்றி கண்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வலி. மேற்குப் பிரதேசத்தில் ஏறக்குறைய 31 ஹெக்ரர் பரப்பளவில் பயறு உற்பத்தியை மேற்கொள்ள ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது. நல்ல விளைவு பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே திட்டமிட்டபடி ஐந்து தடவை நீர்பாய்ச்சுவதற்கு தேவையான மண்ணெண்ணெய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் தற்போதைய வரட்சி காரணமாக மேலும் நீர்பாய்ச்ச வேண்டியதன் அவசியம் பற்றி கிராம உத்தியோகத்தர்கள் வலியுறுத்தியுள்ளதைத் தொடர்ந்து, மேலதிகமாக மண்ணெண்ணெய் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்போகத்தில் பெரும் விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-12)

## விவசாய உபகரணங்கள் கொழும்பிலிருந்து தருவிப்பு
### கமநல சேவை நிலையம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 16

கமநல சேவை நிலையங்களின் ஊடாக விநியோகிப்பதற்காக, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விவசாய உபகரணங்களை கொழும்பிலிருந்து கொள்வனவு செய்வதற்கு யாழ். மாவட்டக் கமநல சேவை நிலையம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்தக் கொள்வனவை மேற்கொள்வதற்கான நியந்தனைகளை திருப்தி செய்யக் கூடிய விவசாயிகளிடமிருந்து அதற்குரிய முற்பணத்தை அறவிடவும் கமநலசேவை நிலையங்கள் முடிவு செய்துள்ளன. (த-162)

## டி. பியை சந்திக்க ஏற்பாடு

கொழும்பு, மே 16

கண்டி ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி விஜேதுங்காவை பொது மக்கள் சந்திக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கான கருமபீடம் ஒன்று கண்டி ஜனாதிபதி மாளிகையில் சென்ற 14 ஆம் திகதி முதல் இயங்கி வருவதாக அறிவிக்கப்படுகிறது. (த-எ)

## தற்கொலைக்கு ஒப்பாம்

கொழும்பு, மே 16

நாளை நடக்கும் மாகாண சபை தேர்தலில் வாக்காளர்கள் வேண்டும் என்றே வாக்களிக்காமல் விடுவது தற்கொலைக்கு சமமானது.

ராஜாங்க அமைச்சரும் இ. தொ. கா. பொதுச் செயலாளருமான எம். எஸ். செல்லச்சாமி முன்கண்டவாறு கூறினார். (த-எ)

## சமுகமளிக்க கோரிக்கை

முல்லை. மாவட்ட கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த கடமைக்குத் திரும்பாதவர்களும் கடமை ஏற்காதவர்களுமான உத்தியோகத்தர், ஆசிரியர், ஊழியர் அனைவரையும் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் நாளை திங்கள் பிற்பகல் 3 மணிக்கு சமுகமளிக்கும்படி முல்லை மாவட்டப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

## அணைக்கட்டு வேலை பூர்த்தி

கிளிநொச்சிப் பகுதியில் பராமரிப்பின்றி அழிந்து போகும் நிலையில் இருந்து வந்த புதுமுறிப்புக் குள அணைக்கட்டின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக உட்கட்டுமாணப் பகுதியின் தேச நிர்மாணிகளால் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

இந்தக் குளத்திலிருந்து சுமார் 985 ஏக்கருக்கு நீர்ப்பாசனம் செய்யக் கூடியதாக உள்ளது. அத்தோடு 387 நிரந்தர விவசாயக் குடும்பங்களும் 250 தற்காலிக விவசாயக் குடும்பங்களும் பயனடைந்து வருகின்றன.

இந்தக் குள புனரமைப்பின் மூலம் பல உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கக் கூடியதாக இருந்ததோடு கால்நடைகளை அதிகமாக வளர்க்கவும், நிலநீர் வளத்தைப் பெருக்கவும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (இ)


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

★ செல்வி ப. டிலானி ★

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த பரமநாதன் - மாலதி தம்பதிகளின் புதல்வி டிலானி இன்று (16-05-1993) தனது முதலாவது பிறந்த நாளை குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா மற்றும் பெரியப்பா, மாமா, வரதன் அண்ணா, சுரேஸ் அத்தான், டென்மார்க்கில் இருக்கும் மாமா, நோர்வேயிலிருக்கும் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், இலங்கையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மாவும், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், மச்சாள்மார், மச்சான்மார், அக்காமார், அண்ணாமார், சித்திமார் அனைவரும் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(6180)



உரும்பராய் கிழக்கு, கோப்பாய், கரந்தன், நீர்வேலி - நாலூர் மத்தியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும்

## சிவபூத நாதேஸ்வரர் தேவஸ்தான புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம்



நிகழும் ஸ்ரீமுக வருடம் வைகாசித் திங்கள் 4ஆம் நாள் (17-05-93) மாலை 3-30 மணி தொடக்கம் 5-30 மணி வரையுள்ள துலாலக்கின சுபவேளையில் வெள்ளோட்ட விழா ஆரம்பமாகும்.

சித்திரத்தேர் நிர்மாணிப்பு:
விஸ்வப் பிரம்ம
ஸ்ரீ செ. பாலச்சந்திரன்
குழுவினர்,
புத்தூர்.

நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| மங்கள இசை | — | இணுவையூர் சிவதாஸ் குழுவினர் |
| வெள்ளோட்ட கிரியைகள் ஆரம்பம் | — | மாலை 3-30 மணி |
| தலைமையுரை | — | தேவஸ்தான தலைவர்- செ. கா. நந்தகுமாரன் |
| ஆசியுரை | — | சு. இராஜேந்திரக் குருக்கள் (கந்தசாமி கோயில் தேவஸ்தானம், நீர்வேலி) |
| | — | சுந்தரேஸ்வரக் குருக்கள் (துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை) |
| வாழ்த்துரை | | துர்க்கா துரந்தரி |
| ஸ்தபதியை பொன்னாடை போர்த்து கௌரவித்தல் | ] | செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.; துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை |
| நன்றியுரை | — | நிர்வாக சபை |

அனைத்து அடியார்களும் வெள்ளோட்ட விழாவில் கலந்து கொண்டு, மனோன்மணி சமேத சிவபூத நாதேஸ்வரர் அருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(25654) — நிர்வாகம்.


# ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு முல்லைத்தீவில் நியமனம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்ற, ஓய்வுபெற்ற கலை, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள், விசேட பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு அவர்கள் ஓய்வு பெறும் போது பெற்ற கடைசிச் சம்பளம் (படிகள் இன்றி) வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் முழுப் பெயர், விலாசம், பிறந்த திகதி, வயது, அடையாள அட்டை இலக்கம், கடைசியாக சேவையாற்றிய பாடசாலை, விசேட திறமை, அநுபவம், கடைசியாகப் பெற்ற சம்பளம், 44/90 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் இளைப்பாறியவரா? பட்டதாரியா? பயிற்றப்பட்டவரா? போன்ற விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து முல்லைத்தீவு மாவட்ட பிரதேச கல்விப்பணிப்பாளரை நாளை திங்கள் காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட பிரதேச கல்விப் பணிமனையில் நேர்முகத் தேர்வுக்கு ஆயத்தமாக சந்திக்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை

## ஆய்வு கூடம் மூடப்பட்டது நோயாளர்கள் அலைச்சல்

தென்மராட்சி, மே. 16

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் இயங்கி வந்த ஆய்வு கூடம் கடந்த ஆறு மாதங்களாக மூடப்பட்டுள்ளதால், நோயாளர்கள் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்களே இந்த ஆய்வு கூடம் மூடப்பட்டதால் பெரிதும் கஷ்டமுறுவதாக தெரிவிக்கப்பட்டது

இவ் ஆய்வு கூடத்தில் பணியாற்றியவர் இளைப்பாறிச் சென்றதைத் தொடர்ந்து அவரின் இடத்துக்கு புதியவர் ஒருவர் நியமிக்கப்படாததாலேயே ஆய்வு கூடம் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-117)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வி வெண்ணிலா கைலைநாதன்

தோற்றம்: 01-12 1975
மறைவு: 16-04 1993

அளவையம் பதியின் ஆரணங்கே
அருணோதயத்தில் அருங்கலை பயின்று
இணை பிரியாதிருந்த இன்ப நாள்
வெண்ணிலா கண்ணில்லான் காலன் கணப்பொழுதில்
மண்ணுளார் கலங்க விண்ணுக்கு அனுப்பி விட்டான்
வெண்ணிலா எம்மைப் பிரிந்து வேதனை தந்தாய்
கண்ணிலே கவினுடன் திகழ்கின்றாய்
விண்மதியம் உன்னை நினைவு ஊட்டும்
என் செய்வோம் ஏங்குகின்றோம் ஏந்திழையே!

(25682)

அருணோதயக் கல்லூரி,
94 A/L மாணவர்கள்.



## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 22 — 01 — 1972



உதிர்வு: 16 — 05 — 1988

செல்வி ந. அருந்தவமலர் (வவி)

(சரவணை கிழக்கு)

ஓடியது ஐந்தாண்டு
ஓயவில்லை உன் நினைவு — நீ
நாடியது விண்ணுறக்கம்
நமக்கில்லை கண்ணுறக்கம்
அன்பின் திரு விளக்காய்
அருந்தவமலர் வவி என்று
ஆசையுடன் உனை அழைத்து
ஆண்டு ஐந்து சென்றதம்மா!
ஏனிந்த சோகத்தை
எமக்களித்தாய் இனியவளே
என்றும் உன் நினைவு
எம் மனதை விட்டு நீங்கா.

உமது பிரிவால் துயருறும்:
பப்பா, அம்மா,
அண்ணா (பேபி)
சகோதரிகள்,
தம்பி (றன்சித்).

26, கனகசபை வீதி,
மானிப்பாய்.

(25682)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் C C பாடசாலைக்கு முன்பாக வீடு மற்றும் இருபது தென்னை மரங்கள், மா, பலா பிரயோசனங்களுடன் ஒன்பது பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும். S. கனகரட்னம், இல. 465/1, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (25650)

பாவித்த சிங்கர் தையல் மெஷினும், Dressing Table உம் விற்பனைக்கு உண்டு. இல: 3, சீனியர் லேன், (தட்டாதெரு சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (25671)

நல்ல இன நான்கு மாத, இரண்டு மாத பன்ரம் கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. இல: 54/6, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (பண்டியன்தாழ்வு அன்னம்மாள் ஆலய முன் ஒழுங்கை) (25686)

மூன்று சோடி பன்ரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: B. கோபிநாத், இல. 123, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (இந்து விடுதி முன்பாக) (25687)

## தளபாடங்கள் விற்பனை

கந்தோர் மேசை (முதிரை), சிறிய அலுமாரி, இரு பக்கப் பார்வையும் கொண்ட நிலைக் கண்ணாடி, சாப்பாட்டு மேசை ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல: 13, மே/பா உதயன் சேவை நிலையம், 82 கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (5922)

## தேவை

பிரபல வியாபார நிறுவனம் ஒன்றுக்கு காசாளரும், பொருள் விநியோகப் பிரிவுக்கு பாதுகாப்பு உத்தியோகஸ்தர் தேவை இருசாராரும் 10 வருடத்துக்கு குறையாத அனுபவத்துடனும் கல்வித்தராதர அத்தாட்சிப் பத்திரங்களுடனும் நேரில் தொடர்புகொள்ளவும். இல. 234. (New Number) கே. கே. வீதி, யாழ்ப்பாணம். (சி 4761)

ரீ மேக்கர், உணவு தயாரிப்பவர்கள் உடன் தேவை. விவரங்களுக்கு நேரில் சந்திக்கவும். நியூ மலாயன் உணவகம், இல. 625, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (25667)

அலுமினியத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிவதற்கு அனுபவமும், ஆற்றலும் உடையவர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். இல. 902, மே/பா உதயன். (6178)

## மணமகள் தேவை

B. Sc Second Class Honours யாழ் பல்கலைக்கழக பட்டதாரி தற்பொழுது Melbourne பல்கலைக்கழகத்தில் Graduate Course in Accountancy பயிலும் மகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். வயது 29, உயரம் 5' 7'', நட்சத்திரம் திருவோணம். குறிப்புடன் விண்ணப்பிக்கவும்: இல 524, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (25608)

## இலவச திருமண சேவை

றோமன் கத்தோலிக்கர்களான 32வயது மணப்பெண்ணுக்கும் (உள்ளூர்), 32 வயது ஜேர்மனி மணமகனுக்கும் மணமக்கள் தேவை. இலங்கையில் விவாகம் செய்து அழைக்கலாம். மாற்றுச் சம்பந்தமும் ஏற்கப்படும். விமலா, இலவச திருமண சேவை, யாழ் நாச்சிமார் கோவிலடி. (25605)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து 2 வயதுக் குழந்தையை நன்கு பராமரிக்கக்கூடிய பொறுப்புள்ள பணிப்பெண் தேவை. வீட்டில் ஏனைய வேலைகளையும் கவனிக்கக்கூடியவர் விரும்பத்தக்கது. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் நேரில் வரவும். 21, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, பழம் சந்தி. (25678)

## தவறிவிட்டது

கோண்டாவிலைச் சேர்ந்த கனகலிங்கம் சர்மிளாவின் பாடசாலை அனுமதிக்குரிய பிறப்பு சான்றிதழ் உட்பட நான்கு தஸ்தாவேஜுக்கள் கிழக்கு கோண்டாவில் சந்திக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஐ. கனகலிங்கம், ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (25672)

10-05-93 கைலாசபிள்ளையார் கோவிலில் 377024001X இலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திருமதி ப. பீதாம்பரம், இல 238, கோவில் வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (25683)

## பெயர் மாற்றம்

யாழ். நகரைவசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25537)

## துளிர்

சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மற்றும் சுபமங்களா, சலனம், விருட்சம், குன்றின் குரல் போன்ற சஞ்சிகைகளும் தரமான புத்தகங்களும் விற்பனையாகின்றன. விவரங்களுக்கு வசந்தம் புத்தக நிலையம், 405, ஸ்ரான்லி றோட், (புதிய பஸ்நிலையம் முன்), யாழ்ப்பாணம். (6177)

## எண்ணெய் முழுக்கு

சியக்காய், வெந்தயம், பயறு, எலுமிச்சங்கோது மற்றும் உடலுக்கும், கேசத்திற்கும் நலந்தரும் மூலிகைப் பொருள்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவியுங்கள். பயன் அடையுங்கள். பக்கற் ஒன்றின் விலை ரூபா 3/-. "மில்க் வைற்". (சி-5127)

## O/L MATHS

G. C. E. O/Lஇல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் இருபத்தாறு வருட அனுபவமுடைய ஆசிரியரினால் நாற்பது மேற்தியாலங்களில (Distinction) பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (25681)

## A/L பௌதிகவியல் 94/95

தனிப்பட்ட பிரத்தியேக முறையில் பௌதிகவியல். தூய கணிதம், பிரயோக கணிதம் அனுபவம் பெற்ற ஆசிரியரால் மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படும். R. பாலசுப்பிரமணியம் B. Sc. (Cey) Dip in Ed 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (6183)

## வகுப்புகள்

க. பொ. த. சாதாரண உயர்தர மாணவர்களுக்கும், ஆரம்ப மாணவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் கணக்கியல் அனுபவமுள்ள விரிவுரையாளரால் கற்பித்துக் கரப்படும். இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25664)

## கோழிக்குஞ்சுகள்

ஒறிஜினல் சிலம்பு பாமாஸ் ஒன்றரை மாத, இரண்டு மாத கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. கந்தசாமி அன் சன்ஸ், இல. 16, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (25649)

## திருத்த வேலைகள்

உங்களுடைய பழுதடைந்த பாடசாலைப் பைகள், பிரயாணப் பைகள், மகளிர் கைப்பைகள் என்பன எமது தொழிலகத்தில் நேர்த்தியாக திருத்திக் கொடுக்கப்படும். ராம் சன்ஸ், சுதுமலை வடக்கு மானிப்பாய். (25634)

## வாக்களிக்க மட்டுமே செல்லலாம்!

நாளைய மாகாணசபைத் தேர்தலின் போது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பதற்கு மட்டுமே வாக்களிப்பு நிலையங்களுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கரியப்பா காலமானார்

சுதந்திரம் பெற்ற இந்தியாவின் இராணுவத்தின் முதலாவது தளபதியாக பணிபுரிந்த பீல்ட்மார்ஷல் கரியப்பா நேற்று அதிகாலை பெங்களூரில் காலமானார். அவருக்கு வயது 93.

## O/L DAY CLASSES

(பகல்நேர வகுப்புக்கள்)

புதிய பிரிவு ஆரம்பம்:
**18 - 05 - 1993**
காலை 8-00 மணி

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-4996)

## பாரதிதாசன்

கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் படிப்புகள்

**G A Q** 1994 ஏப்ரல்
**B. A.** 1994 ஏப்ரல்

பொருளியல்
S. வரதராஜன்
B. A. (Hon.)

ஆரம்பம்:
**16 - 05 - 1993**
(இன்று) 1-00 p.m.
(சி-4994)

## தேவை

கீழ்க்காணும் பதவிகளுக்கு கல்வித் தகைமையும் முன் அனுபவமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

★ மொழிபெயர்ப்பாளர்கள்:
ஆங்கிலம் — தமிழ்
சிங்களம் — தமிழ்

★ மொழிபெயர்ப்பாளர்கள்:
தொழில்நுட்பம்
இயந்திரவியல்

★ அச்சுக்கோர்ப்பாளர்கள்:
★ ஓவியர்கள் (வயது 18 — 30)

விண்ணப்ப முடிவு திகதி: **23 — 05 — 1993**க்கு முதல்

விளம்பர இலக்கம்: 527,
C/o உதயன்.
(25668)

## பிரத்தியேக வகுப்பு

இல. 02, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

**O/L மாணவர்களுக்கான**

விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்
இலத்திரனியல்

ஆரம்பம்: **18 — 05 — 1993**
மாலை 5-30 மணி
(25648)

## WHEEL CHAIR

சக்கர நாற்காலி நோயாளிக்கு
**தேவை**

உடன் தொடர்பு கொள்ளவும்:
ஒவிஸ் இக்குயூப்மென்ட் லிமிட்டெட்,
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(மனோகராச் சந்திக்கு அருகில்)
அல்லது
184 A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(25684)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
20 — 04 — 1922

மறைவு:
27 — 05 — 1992



**திருமதி பெரியதம்பி அன்னம்மா**

பன்புடன் எமை வளர்த்த
பாசமிகு அம்மாவே
அன்புடன் அமுதமொழி பேசி
ஆசைக்கரம் நீட்டி, எங்களையெல்லாம்
ஆளாக்கிய எம் அருமைத் தெய்வமே
பார்விட்டு நீங்கள் சென்று
ஓராண்டு ஆனாலும்
எங்கள் உயிர் உள்ளவரை
அகலாது ங்கள் நினைவு.

உங்கள் பிரிவால் துயருறும்;
மகன்:- P. சண்முகலிங்கம்
P. பரமநாதன்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சந்திரன் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(6185)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வெப்பமும் வேதனையும்!

வெயில் நெருப்பாக எரிகிறது. காலையில் கதிரவன் உதித்த சில நிமிட நேரத்திலேயே அவனது கதிர்கள் கனல் கக்குகின்றன ஏழு மணி என்றதும் சூரிய வெளிச்சம் உடைகளையும் ஊட்றுத்துச் சென்று உடலில் அனலாய்க் கொதிக்கிறது. பொழுது விடிந்தால் ஞாயிறு சாய்ந்து ஆறுமணியாகும் வரை வெப்பம் படுத்தும் பாடு விவரிக்க முடியாதது. வரண்ட பிரதேச மக்களுக்கே புதிதான அனுபவம் இது!

வருடாந்தம் வரும் காண்டாவனம் என்று கூறி அத்தோடு விட்டு விடுகிறோம். என்றுமில்லாதவாறு வெயில் இப்படி எரிபந்தமாகச் சுடுவதற்குக் காரணம் என்ன என்று சிந்திக்கிறோமா? இதற்குக் காரண கர்த்தாக்கள் யார் என்று உணர்கிறோமா? இதன் விளைவாக எழக்கூடிய உடனடி, நீண்ட காலப் பாதிப்புகள் எவ்வாறு அமையும் என்பதை ஆராய முற்படுகிறோமா?

இல்லை! அரசாங்கம் வதைப்பதற்கு மேலதிகமாக, இயற்கையும் எங்களுக்குப் பாதகமாக நின்று சோதிக்கிறதே என்று கவலைப்படுவதோடு நிறுத்திக் கொள்கிறோம்.

கடந்த சில வருடங்களாக எமது பிரதேசத்தில் மழை வீழ்ச்சி குறைந்து கொண்டே வருகிறது. இந்த வருடம் மழை குறைவாக இருந்தால் அடுத்த வருடம் அதிக மழை பெய்யும் என்ற நம்பிக்கை கூட அர்த்தமற்றதாகி வருகிறது அது மட்டுமா? பருவகாலங்களே மாறிவிட்டன. மாரி காலத்தில் மழை இல்லை. வசந்த காலத்தில் வீசும் தென்றல் காற்று பனிகாலத்தில்வீசியது அதேகாலத்தில் இடம் பெயர்ந்துவரும் பறவைகள் இலையுதிர் காலத்துக்கு முன்னரே வந்திருந்தன.

இவற்றுக்குக் காரணர்கள் யார்? மக்கள் தான். இயற்கை தந்த வளங்களை அளவுக்கு அதிகமாக பாவித்து விரயமாக்குபவன் மனிதன். இயற்கையின் —சூழலின்— சமத்துவ நிலை பாதிக்கப்படும் அளவுக்கு அதன் தன்மையைக் கெடுப்பவன் அல்லது மாசுபடுத்துபவன் மனிதன் இயற்கையின் செல்வங்களை தனது தேவைக்காகவும் அதன் பாற்பட்ட வர்த்தகத்துக்காகவும் அழித்து நாசமாக்குபவன் மனிதன்.

மனிதன் செய்யும் இந்த மன்னிக்கமுடியாத குற்றங்களுக்காக அவன் தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். இன்றைய சந்ததி இயற்கையைக் கெடுப்பதற்கும், சூழலை மாசுபடுத்துவதற்கும், வளங்களை அழிப்பதற்கும் அடுத்த சந்ததிதான் பாதிப்புகளை அனுபவிக்க நேரிடும் என்ற அச்சம் இருந்தது. ஆனால் இப்போது குற்றம் புரியும் சந்ததியே நேரில் அதற்கான தண்டனையையும் அனுபவிக்க நேர்ந்துள்ளது.

எனவே இனியாவது மனிதன் இயற்கையைத் தீண்டி அதன் கட்டமைப்பை, சூழலும் தொடர் சமநிலையை, சமன்சீர் கோப்பை, வளச்சமன்பாட்டைக் கெடுத்துவிடக்கூடாது என்பதை உணர வேண்டும். பஞ்சபூதங்களினதும், ஏனைய உயிரினங்களினதும் சீரான இயக்கத்துக்கும், விருத்திக்கும் குந்தகம் ஏற்படுத்தலாகாது

சுத்தமான, பாதுகாப்பான சுற்றுப்புறச் சூழல் மனித உரிமைகளில் ஒன்றாக்கப்பட வேண்டும் என்று கடந்த வருடம் பிரேஸிலில் நடந்த உலக சுற்றாடல் மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இந்த மனித உரிமை மீறுதல் ஒரு சாராரின் உரிமையைப் பறிப்பதாக மட்டுமன்றி மனித சமுதாயம் முழுவதினதும் வாழும் உரிமையைப் பறித்து மனித இனத்தை பூண்டோடு அழிக்க வழிகோலும் என்பதை உலகின் ஒவ்வொரு மனிதனும் மனதிற் கொள்ள வேண்டும்.

---

தேர்தலுக்காக தளர்த்தப்பட்டிருந்த

# அவசரகாலச் சட்டவிதிகள்

# மீண்டும் நாளை முதல் அமுல்

கொழும்பு, மே 16

மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு தளர்த்தப்பட்டிருந்த அவசரகாலச் சட்ட விதிகளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க நாளை திங்கட்கிழமை நள்ளிரவு முதல் மீண்டும் அமுல்படுத்த இருக்கிறார்.

மாகாணசபைத் தேர்தல் நடவடிக்கைகளில் பிரசாரம் செய்பவர்களும், வேட்பாளர்களும், வாக்காளர்களும் எது விதமான அச்சமும் கட்டுப்பாடும் இன்றி அவற்றில் பங்கு பற்றும் வகையில் தேர்தல் சட்டங்களுக்கு ஏற்ற விதத்திலும், கடந்த காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைக்கு அமைவாகவும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியில் இருந்து ம் மாதம் 10 ஆம் திகதி வரை அவசரகாலச் சட்ட விதிகள் சில தளர்த்தப்பட்டிருந்தன.

ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை நடத்துவதை கட்டுப்படுத்தும் அவசரகாலச் சட்டவிதி மீண்டும் அமுலுக்கு வர இருக்கிறது.

தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அவற்றிக்குத் தூண்டுதல் அளித்தல் ஆகியன பற்றிய அவசரகால சட்டவிதிகளும், அரசாங்கத்தைச் சட்டவிரோதமான வழிவகைகள் மூலம் கவிழ்க்கும் நோக்கத்துடன் சுலோகங்களைக் காட்சிக்கு வைத்தல் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிப்பது, வதந்திகள் மற்றும் தவறான அறிக்கைகளைப் பரப்புதல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டவிதிகளும் அமுலுக்கு வரவிருக்கின்றன.

தேசிய பாதுகாப்பு நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய எந்த விதமான பிரச்சினையைத் தூண்டும் பிரசுரங்களை வைத்திருப்பது, பாதுகாப்பது ஆகியவற்றைத் தடை செய்யும் சட்ட விதிகளும் மீண்டும் அமுலுக் கொண்டு வரப்படும்.

பிடியாணை இல்லாமல் தேடுதல் நடத்துவது, கைப்பற்றுவது, கைது செய்வது தடுத்து வைப்பது ஆகியவற்றுக்காக எந்தவொரு பொலீஸ் அதிகாரிகளுக்கும் அல்லது ஆயுதப் படையினருக்கும் அதிகாரங்களை வழங்கும் அவசரகாலச் சட்டவிதிகளும் மீண்டும் அமுல்படுத்தப்படவுள்ளன. (ஓ)

# சிறுவரை பணயம் வைத்தவர் நித்திரையில் சுடப்பட்டார்!

## பாரிஸ் பணய நாடகம் முடிந்தது

பாரிஸ், மே 16

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் சிறுவர் பாடசாலை ஒன்றில் ஆறு சிறுவர்களையும் ஓர் ஆசிரியையும் பணயக் கைதிகளாக வைத்திருந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நபர் பிரெஞ்சுக் கொமொண்டோ படையினரால் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

பணயக் கைதிகளாக இருந்த சிறுவர்களும், ஆசிரியையும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

தனது உடலில் வெடி குண்டுகளைக் கட்டியிருப்பதாகக் கூறிக் கொண்டு துப்பாக்கி ஒன்றுடன் சிறுவர் பாடசாலையினுள் திடீரெனப் பிரவேசித்த அந்த நபர் 21 சிறுவர்களையும் ஆசிரியை ஒருவரையும் பணயக் கைதிகளாக வைத்துக்கொண்டு ஒருகோடி 80 லட்சம் டாலர் பணத்தைக் கப்பமாகக் கேட்டான். இல்லையேல் சிறுவர்களைக் கொன்றுவிடப் போவதாக அச்சுறுத்தல் விடுத்தான்.

இதனை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது பிரெஞ்சு நாடாளுமன்றம் அவசரமாகக் கூடி இது பற்றி ஆராய்ந்து பிரஸ்தாப நபர் கோரிா பணத்தை வழங்க ஒப்புக்கொண்டதாக செய்திகள் தெரிவித்தன

இதன் பின்னர் பணயக் கைதிகளாக வைத்திருந்த சிறுவர்களில் 15 பேரை அந்த நபர் விடுவித்தார்

மிகுதி ஆறு சிறுவர்களையும், ஆசிரியையையும் விடுதலை செய்யவேண்டுமெனில் தான் கோரிய பணயத் தொகையை உடன் செலுத்த வேண்டும் என அந்த நபர் வலியுறுத்தினார்.

கொமாண்டோப் படையினர் ந்தப் பகுதியை சுற்றி வளைத்துக் கொண்டனர். 42 மணித்தியாலங்களுக்கு மேலாக இத்தப் பணய நாடகம் நீடித்தது. பின்னர் நேற்று அதிகாலை பிரஸ்தாப நபர் தூங்கிய சமயம் பார்த்து கொமாண்டோக்கள் அவரை சுட்டுக்கொன்று பணயக் கைதிகளைக் காப்பாற்றினர்.

அவரது உடலில் ஒரு கிலோ எடையான வெடிமருந்து கட்டியிருக்கக் காணப்பட்டது.

பாரிஸில் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவம் நடந்த இடத்தை பிரெஞ்சுப் பிரதமர் நேற்றுப் பார்வையிட்டார். (இ-5-6)

# அரச ஊழியர் திருமலை திரும்ப கப்பல் வசதி

யாழ்ப்பாணம், மே 16

அண்மையில் திருமலையில் இருந்து நரோமா (நகர) கப்பல் மூலம் யாழ் வந்த அரசாங்க உத்தியோகத்தர்களை இங்கிருந்து, மீண்டும் கப்பல் மூலம் அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இங்கிருந்து திரும்பிச்செல்ல பெயர்களைப் பதிவு செய்தவர்கள் நாளை மறுதினம் மாலை பருத்தித்துறையில் இருந்து 'குமண' கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குக் கூட்டிச் செல்லப்பட்டு பின்னர் நரோமா (நகர) கப்ப மூலம் அங்கிருந்து திருமலை செல்ல ஏற்பாடாகியுள்ளது.

கப்பலில் செல்வதற்குத் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ள சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை நாளை திங்கள் முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகத்தில் சமூகமளிக்குமாறு மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் அறிவித்துள்ளார்.

மேற்படி உத்தியோகத்தர்கள் கடந்த புத்தாண்டுக்கு முன்னர் லீவில் வந்து போக்குவரத்து வசதி இன்மையால் யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்பது குறிப்பிடத்தக்கது

தாம் வேலைக்குத் திரும்ப வசதியாக கப்பல் மூலம் திருமலை செல்ல ஏற்பாடு செய்துதருமாறு யாழ் அரச அதிபரிடம் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

# விளையாட்டு நிகழ்வுகள்

ஷப்றா கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று காலை 9-30 மணிகு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்

மட்டுப்படுத்தப்பட்ட 40 ஓவர்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் ஜொலி. ஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் [சொக்ஸ்] அணி மோதும்.

இறுதியாட்ட நிகழ்வுக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி முன்னாள் அதிபர் வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசப் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்

பரிசளிப்பு வைபவம் மாலை 4-30 மணிக்கு நிகழும். [உ]

o o o

யாழ். ஆஸ்பத்திரி வீதி ஐங்கரன் விளையாட்டுக் கழகம், கழக மைதானத்தில் நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8-30 மணிக்கு நடக்கும் [illegible] ஆட்டத்தில் [illegible] அணியை எதிர்த்து தபாலக அணிமோதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 16

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியவர்கள் இன்று முற்பகல் 9 மணி முதல் 10 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் அதனைச் செலுத்த ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-5]

# இஸ்ரேல் அமைச்சர் இந்திய விஜயம்

கொழும்பு, மே 16

இஸ்ரேல் நாட்டின் வெளிநாட்டு அமைச்சர் சிமொன் பெரஸ் நாளை திங்கட்கிழமை இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார்.

அதைத் தொடர்ந்து எதிர் வரும் புதன்கிழமை அமைச்சர் சீனாவுக்கும் விஜயம் மேற்கொள்ள இருக்கிறார்.

இந்தியாவுனும், சீனாவுடனும் இஸ்ரேல் சமீப காலத்தில் ஏற்படுத்திக் கொண்ட உறவை பலப்படுத்துவதே அமைச்சர் பெரஸ் விஜயங்களின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

# ஈழ அகதிகள் தாயகம் திரும்ப ஐ. நா உதவும்

கொழும்பு, மே 16

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளவர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க தமிழக அரசுக்கு அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் உதவும்.

மாநில மறுவாழ்வு ஆணையாளர் சி எம். இராம்தாஸ் இதனைத் தெரிவித்தார்.

மத்திய அரசின் அனுமதி பெற்ற பின்னரே இலங்கைத் தமிழ் அகதிகளை மாநில அரசு திருப்பி அனுப்பும் என்றும் அவர் கூறினார். (த-எ)

உணவு உற்பத்தி, அபிவிருத்தி:

# ஜப்பான் இலங்கைக்கு 69 கோடி ரூபா நிதி உதவி

கொழும்பு, மே 16

உணவு உற்பத்தித்துறை அபிவிருத்திக்கு என ஜப்பான் இலங்கைக்கு 69 கோடி ரூபா நிதி உதவியை வழங்குகின்றது.

இது சம்பந்தமான உடன்படிக்கை ஒன்று கடந்த வியாழன் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

ஜப்பானிய தூதரும் நிதி அமைச்சுச் செயலாளர் ஆர் பாஸ்கரலிங்கமும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

நாட்டின் உணவு உற்பத்தி அபிவிருத்திக்கென்று 1977 முதல் 1993 வரை இலங்கைக்கு ஆயிரத்து 240 கோடி ரூபா நிதி உதவியை ஜப்பான் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-எ)

யாழ். ஆஸ்பத்திரிக்கு

# உப மின்நிலையம் நிறுவும் யோசனை நிராகரிப்பு

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தேவைகளுக்கு சீரான முறையில் போதிய மின்சாரம் கிடைக்கக் கூடியதாக, வைத்தியசாலை உப மின்நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற யோசனையை சுகாதார மகளிர் விவகார அமைச்சு நிராகரித்துவிட்டது

இப்போது யாழ். போதனா வைத்தியசாலையின் எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றப் போதுமான மின்சார வசதி இல்லை. ஜெனரேற்றர்கள் அடிக்கடி பழுதடைவதாலும், உதிரிப் பாகங்களைப் பெறுவதில் உள்ள சிரமங்களினாலும் மின்சார விநியோகம் சீராகவும் இல்லை.

இந்தக் குறைபாடுகளைத் தீர்த்து போதியளவு மின்சாரத்தைச் சீராகப் பெறுவதற்கு வைத்தியசாலைக்கென ஓர் உப மின்நிலையத்தை நிறுவ வேண்டும் என்று யாழ் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் சுகாதார மகளிர் அமைச்சுக்கு யோசனை தெரிவித்திருந்தனர்.

அந்த யோசனையை அமைச்சு முற்றாக நிராகரித்துவிட்டது

இந்த வேளை போதனா வைத்தியசாலையின் பிரதான ஜெனரேற்றர் பழுதடைந்துவிட்டதால் மின விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது சிறிய ஜெனரேற்றர்கள் மூலம் அவசர சிகிச்சைகளுக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்படுகிறது. (அ-17)

## 1995 மார்ச்சில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்வதன் மூலம், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலை நடத்த தாம் வற்புறுத்த முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பிரசாரக் கூட்டங்களில் கூறிவந்துள்ளார்.

அவரின் இந்தக் கருத்தை ஜனாதிபதி விஜேதுங்க நிராகரித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலைப் பற்றி பேசவே தேவையில்லை. அது திட்டமிட்டபடி 1995 மார்ச்சில் நடைபெறும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஒ-6)

# பிரேமாவின் சகாக்களை நீக்கும் முயற்சியில் டி. பி.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு செல்வாக்கானவர்களையும், நெருக்கமானவர்களையும் அகற்றும் முயற்சியில் புதிய ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா ஈடுபட்டுள்ளார்.

'ராவய' ஆசிரியர் திரு. விக்டர் ஐவன் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பிரேமதாசாவுக்கு மிக நெருங்கியவரும், பாதுகாப்பு ஆலோசகருமான ஓய்வுபெற்ற துணைப் பொலீஸ் மா அதிபர் ஏ சி. லோறன்ஸினால் அமைக்கப்பட்டு அவரின் தேவைக்காக நடத்தப்பட்டு வந்த விசேட நுண்ணாய்வுப் பிரிவு கலைக்கப்பட்டுள்ளது.

பிரேமதாசாவின் நெருங்கிய உறவினர் ஒருவரைப் பணிப்பாளராகக் கொண்ட எயர் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபையையும் கலைப்பதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார். [இ-5-6]

## ஜனாதிபதியின்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில்—

மாகாண சபைத் தேர்தலில் ஆகக்குறைந்தது ஐந்து மாகாண சபைகளில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டும் என்றும்—

அப்பொழுது பதவியில் இருந்து விலகுமாறு தாம் அரசாங்கத்தை கேட்கவுள்ளதாகவும் சிறிமா பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

நாட்டை மிகவும் குழம்பிய நிலைமைக்குக் கொண்டு வந்துள்ள நிர்வாக அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து மீண்டும் நாடாளுமன்ற ஆட்சி முறையை நிறுவுவதே தமது நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி கூறியுள்ளது அருவருக்கக் கூடியதாக உள்ளது" என்று ஸ்ரீ. ல சு. கவின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இக்கூற்றானது வாக்காளர்களை அச்சுறுத்தும் வகையில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

ஐ ஐ தே. முன்னணி தலைவர் காமினி திசாநாயக்கா கருத்துத் தெரிவிக்கையில் —

மாகாண சபைத் தேர்தலில் தமது கட்சி வெற்றியீட்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார். [ஒ-6]

## பிரபாகரனுடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாகரனுடன் நேரில் பேசுவதற்கு விரும்புவதாகத் தெரிவித்திருந்தார்.

இது குறித்து கடந்த வெள்ளிக்கிழமை கண்டியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் செய்தியாளர்கள் கேட்டபோதே, தலைவர் பிரபாகரனுடன் பேசுவதற்கு எவரும் உதவி புரியலாம் என்று கூறினார்.

ஜனாதிபதி இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

இப்போது வடக்கு - கிழக்கு யுத்தமே பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இதற்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும். தீர்வுக்கான வழியும் பேச்சுவார்த்தை தான் அதற்கான வழி எது என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

"விடுதலைப் புலிகள், ஆயுதங்களைக் கைவிட்டு சமாதானப் பேச்சுக்கு முன்வர வேண்டும். மனித உயிர்களைக் கொல்வதன் மூலம் எதனையும் சாதிக்க முடியாது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் பொறுப்பேற்று செயற்பட வேண்டும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது நாட்டுக்குச் செய்யும் மிகப் பெரிய சேவையாகும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நான் எப்போதும் தயாராகவே இருக்கிறேன்.

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்காக வருடம் 2 ஆயிரத்து 500 கோடி ரூபா செலவு செய்யப்படுகிறது. இந்தப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணப்படும் பட்சத்தில் இப் பணத்தைப் பயன்படுத்தி பெரும் அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## தமக்கு எதிரானவர்களை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் ஒன்றாக மது அருந்திக்கொண்டிருந்தனர். அச்சமயம் ரஞ்சன் விஜேரத்தினா ஜனாதிபதி பிரேமதாசவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்சாவைக் கடத்தும் திட்டம் குறித்துத் தெரிவித்தார். அடுத்த நாட் காலை ரிச்சர்ட் டி சொய்சாவின் சடலம் கொடூரமாகச் சிதைக்கப்பட்ட நிலையில் லுணாவைக் கடற்கரையில் காணப்பட்டது.

★ 47 அரசதரப்பு எம். பிக்கள் கையெழுத்திட்ட அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணையில் இருந்து தப்பிக் கொள்வதற்காக, பிரேமதாச எம். பிக்களுக்கும் விட்டுக் கொடுத்து உதவிகளையும் செய்தார்.

★ எதிரிகளுக்கு எதிரான கொடூரமான செயல்கள் பத்திரிகையாளர்கள் பக்கமும் நீடிக்கப்பட்டன. கடந்த வருடம் பிரேமதாச பற்றி கேலிச் சித்திரம் வரைந்த சித்திரக் கலைஞர் ஒருவரை கொலைஞர்கள் கத்தியால் குத்தினார்கள்.

★ இந்திய இராணுவத்துடனும், ஏனைய ஆயுதம் தரித்த குழுக்களுடனும் போரிடுவதற்கு சக்தி வாய்ந்த ஆயுதங்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்குமாறு இலங்கை இராணுவத்துக்கு பிரேமதாச கட்டளையிட்டார். இதன் பின்னர் இராணுவத்தினரை முகாமுக்குள் முடக்கிய ஜனாதிபதி விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தார். பேச்சுக்கள் தோல்வி அடைந்தன. அந்த இடைக்காலத்தில் வலுப்பெற்ற விடுதலைப் புலிகள் மீண்டும் போரைத் தொடங்கினர். இந்தச் சம்பவம் இராணுவத்தினரிடையே பிரேமதாச மதிப்பிழக்கச் செய்தது.

★ இலங்கையின் இரண்டாவது சக்தி வாய்ந்தவராக பிரேமதாசவின் பொருளாதார ஆலோசகர் பாஸ்கரலிங்கம் இருந்தார். மகாராஜா நிறுவனத்தார், ஏ. கே. தர்மதாச முதலாளி ஆகியோர் பிரேமதாசாவின் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். இவர்கள் பாஸ்கரலிங்கத்தின் உதவியைப் பெற்று இலங்கை வர்த்தகத் துறையில் பெரும் ஏகபோகம் செலுத்தி வந்தனர்.

★ 2,500 வருட இலங்கையின் வரலாற்றில் ஆகக் கூடுதலான கொடூரங்கள் நடைபெற்ற ஆட்சிக் காலம் பிரேமதாசாவின் ஆட்சிக் காலம் ஆகும். (இ-6)


ஸ்கந்தா ஐக்கிய வி. க. நடத்தும்

**உதைபந்தாட்ட**

**இறுதிச் சுற்றுப் போட்டியும்**

**பரிசளிப்பு விழாவும்**

காலம்:- 17 - 05 - 1993 திங்கள்
பி. ப. 2.45 மணிக்கு

இடம்:- ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானம்

போட்டியில் கலந்துகொள்ளும் கழகங்கள்

3 ஆம், 4 ஆம் இடத்திற்கான
யொலிபொய்ஸ் எதிர் யங்கென்றீஸ்
(மல்லாகம்) (இளவாலை)

1 ஆம், 2 ஆம் இடத்திற்கான
சிறிமுருகன் எதிர் றோயல்
(மயிலங்காடு) (ஊரெழு)

செயலாளர்
ஸ்கந்தா ஐ. வி. க.

சுன்னாகம். (சி/2009)



**'ஷப்றா' கிண்ணத்துக்காக**

ஜொலி ஸ்ரார்ஸ் வி. க.

நடத்தும்

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்

**கிரிக்கெட் போட்டித்தொடர் - 1993**

**இன்று இறுதியாட்டம்**

யாழ். இந்து மைதானத்தில்
காலை 9. 30 மணி முதல்

ஜொலி ஸ்ரார்ஸ் அணி
எதிர்
சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி

பிரதம விருந்தினர்:
வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசப்
(முன்னாள் அதிபர், சென். பற்றிக்ஸ் கல்லூரி)

அனைவரும் வருக!

நா. சோமசுந்தரம் — தலைவர்
க. தர்மகுலசிங்கம் — செயலாளர்

போட்டிக் குழு,
ஜொலி ஸ்ரார்ஸ் வி. க.



**தமிழீழ காவல்துறை**

ஸ்ரீலங்கா பொலீஸ் திணைக்களத்தில் வேலை செய்து ஓய்வுபெற்ற, 55வயதிற்குட்பட்ட, சகல தரத்திலுமுள்ள இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் பழைய பூங்காவில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறையின் மக்கள் தொடர்பகத்திற்கு நாளை 17-05-93ந் திகதி காலை 10 மணிக்கு தவறாது சமுகந்தரவும்.

அனைவரும் தத்தமது அடையாள அட்டைகளையும் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பா. நடேசன்
பொறுப்பாளர்

[சி/5132]


## மரண அறிவித்தல்கள்

### தெண்டாயுதபாணி முரளிதரன்

(பிரபல ஓவியர்)

தெண்டாயுதபாணி முரளிதரன் காலமானார். இவர் அராலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற தெண்டாயுதபாணி (இளைப்பாறிய பிரதம லிகிதர், கல்வி இலாகா), பரமேஸ்வரி ஆகியோரின் மூத்த மகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், நிசாகரன், துளசி, சோபிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி சங்கர் (கனடா) காயத்திரி (ஆசிரியை அராலி தெற்கு அ மி. த. க பாடசாலை), நிரைஞ்சன் (சுவீஸ்), பிறேமினி (மாணவி வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணபதிப்பிள்ளை தையல்நாயகி தம்பதிகள் பரமநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனும், சின்னப்பு, காலஞ்சென்றவர்களான ஞானபூரணம், புண்ணியமூர்த்தி, நாகரத்தினம் ஆகியோரின் அன்புப் பேரனும், நகுலராசா (சவுதி), சிவசுப்பிரமணியம், புனிதவதி ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று (16 05- 1993) ஞாயிறு காலை 9 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

திருவேரகம்
அராலி தெற்கு. (25693)

### ஆ. சி. பத்மநாதன்

(இளைப்பாறிய அன்பீல்ட் தோட்ட எழுதுவினைஞர்)

நயினாதீவு பிடாரி அம்பாள் தேவஸ்தான உரிமையாளர்களில் ஒருவரும், 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆ. சி. பத்மநாதன் கொழும்பில் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவசம்பு - சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை, மற்றும் அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற நடராசா, பரமசாமி, பழனிவேலு, குணரத்தினம் [உதவிப் பணிப்பாளர், விளையாட்டுத்துறை], சோதீஸ்வரி ஆகியோரின் சகோதரரும், பத்மமலர் (ஆசிரியை றோ. க த. க பாடசாலை, ஆனைக்கோட்டை), புவனமலர் [ஆசிரியை], பத்மரஞ்சன் (ஆசிரியர்), சிவரஞ்சன், சிவமலர், புவனரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும்—

சிவகடாட்சம் (பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்), விஜயானந்தன் (ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கோபாலப்பிள்ளை, லீலாவதி, சிவபாக்கியம், ஜெயலட்சுமி, சிவனேசரத்தினம் (ஆசிரியர்), மாசிலாமணி, பொன்னம்மா, விசாலாட்சி, தனலட்சுமி, இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோ சிவகடாட்சம்
(மருமகன்)

212, காரைநகர் வீதி,
வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி,
கொட்டடி. (25698)

மரண அறிவித்தல்கள் 2ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org